## In the Court of the District Munsif, Eraniel

Original Suit No.83/2018 Date:18.10.2024

(P.W.1)- ஜோசப் ஹென்றி லியோ

**குறுக்கு விசாரணை**

1. யார் எனக்கு பணம் தரவேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் கார்லோஸ் நாடார் ஆகும். நான் இந்த வழக்கில் அந்தோணிமுத்து நாடார் பணம் தரவேண்டும் என தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கார்லோஸ்க்கும் எனக்கும் என்ன தொடர்பு உள்ளது என்றால் எந்த தொடர்பும் கிடையாது. அந்தோணிமுத்து S/o. கார்லோஸ் நாடாருக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணமாக என் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணம் உண்மையாணதா அல்லது போலியானதா என்றால் உண்மையானது. எதன் அடிப்படையில் மேற்சொன்ன வா.சா.ஆ.1 ஆவணம் உண்மையானது என்று சொல்கிறேன் என்றால் அது பதிவுசெய்யப்பட்டுள்ள ஆவணம் என்பதால் அது உண்மையாணது என்று கூறுகிறேன். வா.சா.ஆ.1 கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்சொன்ன ஆவணத்தின் நகல்தான் என்றால் சரிதான். அது தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தின் நகல் தட்டச்சு செய்யப்பட்டுள்ள நிலையில் அதனுடைய அசலும் தட்டச்சு செய்யப்பட்டுதான் இருக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன அசல் மற்றும் நகலிற்கு உள்ள முரண்பாடு காரணமாக வா.சா.ஆ.1 ஆவணம் போலியானதாக இருக்கவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் எந்த சர்வே எண்ணிற்கு எழுதப்பட்டது என்று சொன்னால் சர்வே எண் 450/8 -ற்கு எழுதப்பட்டது. எந்த கிராமம் என்றால் தலக்குளம் கிராம பஞ்சாயத்தாகும். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் வா.சா.ஆ.2 -இல் சர்வே எண் 450/8 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன இரண்டு சொத்துகளில் எந்த சொத்து அந்தோணிமுத்திற்கு சொந்தமானது என்று சொன்னால் அதில் இரண்டு சொத்துமே அந்தோணிமுத்திற்கு சொந்தமானதாகும். வா.சா.ஆ.2-இல் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்ணை மாற்றி எழுதவேண்டும் என்று மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் பணம் கொடுத்ததாக

(P.W.1)- ஜோசப் ஹென்றி லியோ

சொல்லப்படும் பெனன்சின் பெல்லார்மின் இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கப்படவில்லை என்றால் சேர்க்கப்படவில்லை. பெனன்சின் பெல்லார்மின் பணம் கொடுக்கவேண்டும் என்று அவருக்கு எந்த வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன பெனன்சின் பெல்லார்மின் இந்த வழக்கில் பிரதிவாதியாக ஏன் சேர்க்கப்படவில்லை என்றால் அவரை சேர்க்கவேண்டும் என்று அவசியமில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் போலியாக தயாரிக்கப்பட்டது என்பதால் மேற்சொன்ன பெனன்சின் பெல்லார்மின் அவரை இவ்வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. அந்தோணிமுத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்தோணிமுத்து எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் உயிரோடு இருக்கும்போது பெனன்சின் பெல்லார்மினுக்கு பணம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்து பார்த்து பின்புதான் எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணமானது ரூ. 25,000/- கடன் சம்மந்தமானது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 உருவாக்கப்பட்ட தேதி 18.06.2003 என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 உருவாக்கப்பட்ட தேதி 06.11.2007 தேதி என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் ரூ.25,000/- கடன் தொகை என்று சொல்லியுள்ளதா என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன சொல்லப்பட்டதோ அதேதான் வா.சா.ஆ.2 ஆவணத்திலும் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன இரு ஆவணத்திற்குமிடையே 3 வருடம் காலம் இடைவேளை உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒரு மாதத்திற்கு ரூ.750/- வட்டியாக கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

4. மேற்சொன்ன 3 ஆண்டுகள் கால இடைவேளையில் செலுத்தப்பட்ட வட்டி ரசீது ஏதேனும் இந்த வழக்கில் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த 3 வருடத்தில் கடன் முடிக்கப்பட்டுவிட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்தோணிமுத்து கேரள மாநிலம் ஓமலூரில் கடந்த 25.06.2007 அன்று இறந்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணம் உருக்கப்பட்ட தேதி 06.11.2007 ஆகும். எனவே அந்தோணிமுத்து இறந்த விவரம் தெரிந்த பிறகுதான் நான் வா.சா.ஆ.2 ஆவணம்

(P.W.1)- ஜோசப் ஹென்றி லியோ

மோசடி செய்யவேண்டும் என்று உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் உருவாக்கப்பட்ட தேதியில் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.2 ஆவணத்தை பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பெனன்சின் பெல்லார்மின் அந்தோணிமுத்து நாடார் இறந்தபிறகு வழக்கின் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு தேதியில் ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல் (பொறுப்பு)